பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

12 09 2025 FRIDAY 6.30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் உணர்வுகளின் குரலாக அறிவுசார் இந்தியா இயக்கம் உருவெடுக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வேளாண்துறையில் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- சுரங்க திட்டங்களுக்கு, பொதுமக்கள் கருத்து கேட்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.
- வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Minakshi அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

நாட்டின் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் உணர்வுகளின் குரலாக அறிவுசார் இந்தியா இயக்கம் உருவெடுக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்த இயக்கம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

லட்சக்கணக்கான ஓலைச்சுவடிகள் சேதமடைந்த போதிலும், உலகிலேயே அதிக அளவாக ஒரு கோடி ஓலைச்சுவடிகளை இந்தியா கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஒட்டுமொத்த உலகத்தின் நன்மைக்கான கருத்துக்கள் இந்த ஓலைச்சுவடியில் இடம்பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவற்றை டிஜிட்டல்மயமாக்கும் நோக்கில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நம் நாட்டின் அறிவுசார் பாரம்பரியம் வளமானது என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்

>>>>><<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வேளாண்துறையில் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

இன்று நாக்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன்மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரமும் மேம்படும் என்றார்.

நாடுமுழுவதும் 400க்கும் மேற்பட்ட எத்தனால் உற்பத்தி நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

மத்திய அரசின் சுரங்க திட்டங்களுக்கு, பொதுமக்கள் கருத்து கேட்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதை திரும்பப் பெற வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

முக்கிய மற்றும் அரியவகை கனிமங்களின் சுரங்கத் திட்டங்களுக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்பிலிருந்து விலக்களித்து, சுற்றுச்சூழல் அமைச்சகம் கடந்த 8ஆம் தேதி பிறப்பித்த உத்தரவையும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை கருத்தில் கொண்டு, அந்த உத்தரவை திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

மாநிலங்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரி பங்கீட்டை 75 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று தமிழக சட்டப்பேரவை தலைவர் திரு. அப்பாவு வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

மாநில மக்களுக்கு பயனளிக்கும் வகையில் கூடுதல் திட்டங்களை செயல்படுத்த இந்த நடவடிக்கை அவசியமாகிறது என்றும் திரு. அப்பாவு கூறினார்.

>>>>><<<<<

நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களின் நிலை குறித்து அறிந்து கொள்வதற்காக புதுதில்லியில் 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இந்த கட்டுப்பாட்டு அறைக்கான தொலைபேசி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, சிக்கியுள்ள தமிழர்களின் விவரங்களை தெரிவிக்கவும், நேபாளத்தில் உள்ள குடும்ப உறுப்பினர்களின் நிலைமையை அறிந்துகொள்வதற்கும், 0 1 1-2 4 1 9 3 3 0 0 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுமாறு மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

9 2 8 9 5 1 6 7 1 2 என்ற வாட்ஸ் ஆப் எண்ணிலும் விவரங்களை தெரிவிக்கலாம் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

தொழில்துறையினருக்கு அஇஅதிமுக எப்போதும் ஆதரவாக இருக்கும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இன்று திருப்பூரில் தொழில்துறையினர், விவசாயிகள் உள்ளிட்டோருடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொழில்துறையினரின் கோரிக்கைகளை நிறைவேற்ற திமுகவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவறிவிட்டதாகவும் அவர் குறை கூறினார்.

வேளாண் வளர்ச்சிக்கும், திமுக அரசு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்று திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>>>>><<<<<

ஈரோட்டிலிருந்து பீகாரின் Jogbani-க்கு அம்ரித் பாரத் ரயில் சேவையை பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் திங்கட்கிழமை தொடங்கி வைக்கிறார்.

Jogbani-யில் நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் இந்த ரயில் சேவையை தொடங்கி வைக்கவுள்ளதாக தெற்கு ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

நாட்டுப்புற கலைஞர்களின் விழிப்புணர்வு பேரணி இன்று சேலத்தில் நடைபெற்றது.

இதன் காரணமாக, சேலம் மாநகரமே விழாக்கோலம் பூண்டது போல் காணப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 50 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரை 62 செகண்ட்ஸ்)

தென்மேற்கு பருவமழை வரும் திங்கட்கிழமை தொடங்கி படிப்படியாக விலகக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

இதற்கிடையே, தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் பேரிடர் முன்னெச்சரிக்கை ஒத்திகை பயிற்சி இன்று நடைபெற்றது.

தீயணைப்புத் துறை சார்பில் இந்த ஒத்திகை பயிற்சி மேற்கொள்ளப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செந்தில் 45 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணையிலிருந்து உபரிநீர் தென்பெண்ணை ஆற்றில் வெளியேற்றப்படுவதால், கரையோரப் பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து வினாடிக்கு 18 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

>>>>><<<<<

வேலூர் மாவட்டம், குடியாத்தம் பகுதியில் ஆன்லைன் மூலம்  போதை பொருட்களை வாங்கி பயன்படுத்திய 15 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான கல்லூரி களப் பயணத்தை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Minakshi அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் Liverpool-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், இங்கிலாந்தின் Alice Pumphrey -ஐ வென்றார்.

இதன்மூலம் இந்தியாவுக்கு மேலும் ஒரு பதக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Ashmita Chaliha அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-18, 14-21, 21-18 என்ற செட்கணக்கில் மலேசியாவின் Wong Ling Ching-ஐ வென்றார்.

>>>>><<<<<

உலக சீனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Leena Dhapre அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இதர மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் Jessie Philip, Poonam Tetwawadi ஆகியோரும் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

>>>>><<<<<

ஹாங்காங் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

தூத்துக்குடியில் கடல் சாகச விளையாட்டுப் போட்டிகள் இன்று தொடங்கின.

நாடுமுழுவதிலுமிருந்து 200க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

**>>>>>END<<<<**